முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.69/2024**

**(LW-7) (PW -4)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிபாலன் | மதம் | |
| **த.பெ.** | ராஜேந்திரன் | தொழில் | |
| ஊர் | ஆழியூர் | வயது | 32 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16,10,2025 |

இன்று (16.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் 1,2 ஆஜரில்லை குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் ஆழியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன் . நான் 2018 ம் ஆண்டு நானும் , மணிமாறன் என்பவரும் திருபுவனையிலிருந்து பாக்கம் கூட்டுரோடுக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது போலிசார் அங்கு இருந்தார்கள் . அப்போது போலிசார் கேட்டதற்காக கையெழுத்து போட்டுக்கொடுத்தோம் ஒப்புல் வாக்குமூலத்தில் ்உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து ம்ட்டும் **அ.த.சா.ஆ 3.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறு்க்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

2.5.2018 அன்று நானும் மணிமாறன் என்பவரும் பள்ளிநேலியனுர் ரயில்வே கேட் அருகே சென்றபோது கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் எதிரி ஜனார்தனன் என்பவரை எங்கள் முன்பு விசாரிக்க எங்களை அழைத்து எங்கள் முன்பு விசாரித்தபோது எதிரி ஜனார்த்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கையெழுத்திட்ட ஆவணத்தில என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன எழுதி இருந்தது என்றுபோலிசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால்சரிதான்.

மறு விசாரணை இல்லை

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Principal Subordinate Judge,
Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.69/2024**

**(LW-6) (PW -3)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிமாறன் | மதம் | |
| **த.பெ.** | சேகர் | தொழில் | |
| ஊர் | ஆழியூர் | வயது | 35 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16,10,2025 |

இன்று (16.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் 1,2 ஆஜரில்லை குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் ஆழியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன் . நான் 2018 ம் ஆண்டு நானும் , மணிபாலன் என்பவரும் திருபுவனையிலிருந்து பாக்கம் கூட்டுரோடுக்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது போலிசார் அங்கு இருந்தார்கள் . அப்போது போலிசார் கேட்டதற்காக கையெழுத்து போட்டுக்கொடுத்தோம் ஒப்புல் வாக்குமூலத்தில் ்உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து ம்ட்டும் **அ.த.சா.ஆ 2.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறு்க்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

2.5.2018 அன்று நானும் மணிபாலன் என்ப்வரும் பள்ளிநேலியனூர் ரயில்வே கேட் அருகே சென்றபோது கண்டமங்கலம் காவல் ஆய்வாளர் எதிரி ஜனார்தனன் என்பவரை எங்கள் முன்பு விசாரிக்க எங்களை அழைத்து எங்கள் முன்பு விசாரித்தபோது எதிரி ஜனார்த்தன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கையெழுத்திட்ட ஆவணத்தில என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்ன எழுதி இருந்தது என்றுபோலிசார் என்னிடம் படித்து காண்பிக்கவில்லை என்றால்சரிதான்.

மறு விசாரணை இல்லை

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Principal Subordinate Judge,
Villupuram

முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம். விழுப்புரம்.

**S.C.No.69/2024**

**(LW-2) (PW - 2)**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | மதம் | |
| **த.பெ.** | ஆதிசிவன் | தொழில் | |
| ஊர் | கிழக்கு மருதூர் | வயது | 39 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 16,10,2025 |

இன்று (16.10.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

எதிரிகள் 1,2 ஆஜரில்லை குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

சத்தியமாக சொல்கிறேன்

முதல் விசாரணை

நான் விழுப்புரம் மதுவிலக்கு அமுல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன் 2.5.2018 ஆம் தேதி நான் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வந்தேன் அப்போது உதவி ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் காவலர்கள் 1695 திரு ராமன் ஆகியோர்கள் கண்டமங்கலம் கடைவீதியில் மதகடிப்பட்டு சேர்ந்த ஜனா என்கிற சின்ன ஜனா என்கிற ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியவர்கள் சொக்கலிங்கம் டீக்கடை எதிரே மாமூல் கேட்டு கடைகளில் பிரச்சனை செய்து வந்தனர் உடனே உதவி ஆய்வாளர் பாலமுருகன் அவர்களுக்கு வந்த தகவலின் படி நாங்கள் அங்கு சென்றோம் அங்கு ஜனார்த்தனன் மற்றும் கதிரவன் ஆகியோர் கையில் கத்தி தடி ஆகியவற்றை வைத்துக் கொண்டு கடையில் மாமூல் கேட்டு டீக்கடை இருந்த கண்ணாடி கிளாஸ் உடைத்து பிரச்சினை செய்து கொண்டிருந்தார்கள் எங்களை பார்த்ததும் அசிங்கமாக திட்டி கத்தியால் உதவி ஆய்வாளரை வெட்ட வந்தார் அவர் சுதாரித்துக் கொண்டு கீழே குனிந்து கொண்டார் பின்னர் அங்கிருந்த பி .ஒய்.01 டிடள்யு 6199 மாருதி ஸ்விப்ட் காரில் தப்பிக்க முயன்றார்கள் அவர்களில் கதிரவன் என்பவரை சுற்றி வளைத்து பிடித்து விட்டோம் ஜனார்த்தனன் மட்டும் கத்தியை காட்டி கிட்ட வந்தால் கொன்று தொலைத்து விடுவேன் என்று மிரட்டி கொலை மிரட்டல் விடுத்து தலைமுறை ஆகிவிட்டார் நானும் உதவி ஆய்வாளர் பாலமுருகன் மற்றும் காவலர் ராமன் ஆகியோர்கள் எதிரி கதிரவன் மற்றும் வழக்கு சொத்தான சிப்ட் காருடன் காவல் நிலையத்திற்கு வந்தோம். உதவி ஆய்வாளர் பாலமுருகன் இது சம்மந்தமாக புகார் கொடுத்தார் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

2.5.2018 க்கு பிறகு சுமார் எவ்வளவு காலம் அதே காவல் நிலையத்தில் நான் பணிபுரிந்தேன் என்றால் சுமார் 1-½ ஆண்டு காலல் பணிபுரிநதேன். உதவி ஆய்வாளர் திரு பாலமுருகன் அவருக்கு சம்பவம் குறித்து தகவல் வந்தபோது நிலைய காவல் ஆய்வாளர் எங்கே இருந்தார் என்றால் அவர் வெளியே ரோந்தில் இருந்தார் . தகவல் வந்தது பற்றி உதவி ஆய்வாளர் ரோந்து பணியில் இருந்தபோதே காவல் ஆய்வாளருக்கு தெரிவித்தாரா என்றால் அது எனக்கு தெரியாது இந்த

வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் எண்ணெய் எத்தனை மணிக்கு விசாரித்தார் எந்த தேதியில் விசாரித்தார் என்றால் சம்பவ தினத்தன்று மதியம் சுமார் 3 மணிக்கு விசாரித்தார் புகார் உதவி ஆய்வாளர் திரு பாலமுருகன் என்பவரால் எத்தனை மணிக்கு கொடுக்கப்பட்டது என்றால் அன்றைய தினம் சுமார் ஒரு மணி இருக்கும் தப்பித்து ஓட முயற்சித்த ஜனார்த்தனன் என்பவரை பிடிக்க முயற்சி செய்தோமா என்றால் முயற்சி செய்தோம் ஆனால் பிடிக்க முடியவில்லை அது சம்பந்தமாக காவல் ஆய்வாளருக்கு தகவல் கொடுக்கப்பட்டதா என்று உதவி ஆய்வாளருக்கு தான் தெரியும் இந்த சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டதற்கு பிறகு ஜனார்த்தனன் என்பவருக்கு காலில் முறிவு ஏற்பட்டது என்றால் காலில் கட்டு போட்டிருந்தார். இந்த சம்பவம் சம்பந்தமாக டீ கடைக்காரர் சொக்கலிங்கம் என்பவரோ அல்லது எதிரிகள் மாமூல் கேட்பதாக காவல் நிலைய்திற்கு புகார் கொடுத்தார்களா என்றால் நேரடியாக புகார் கொடுக்கவில்லை போன் மூலம் தகவல் கொடுத்திருந்தார்கள். இந்த வழக்கு பதிவு செய்த பிறகு ஜனார்தனன் என்பவர் மீது குண்டர் சட்டத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எதிரி ஜனார்தனன் என்பவர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தில் நடவடிக்கை எடுப்பதற்காக பொய்யாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Principal Subordinate Judge,
Villupuram